A. NO 183552

# நித்திய கல்யாணி அம்மாள் அந்தாதி

O-,12MPP,R
N29
183552

OFFICE OF ... 4-JAN 1930

கணபதி துணை.

நாங்குநேரித் தாலுகா இராதாபுரம்

# நித்திய

# கலியாணி அம்பாள் அந்தாதி.

இது

கு. பன்னிருகைப்பெருமாள் கவிராயர் அவர்கள்

இயற்றப்பெற்று

---

இராதாபுரம்

தெ. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்

பொருளுதவியால்

---

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1929.

istered Copy Right.

O-,12MPP,R

N29
133552

கணபதி துணை.

நாங்குநேரித் தாலுகா இராதாபுரம்

# நித்திய கலியாணி அம்பாள்

# அந்தாதி.

இஃது

பத்தைபண்டிதன்குறிச்சி

குலசேகரநாதக் கவிராயரவர்கள்

குமாரர்

**பன்னிருகைப்பெருமாள் கவிராயர்**

அவர்களால்

இயற்றப்பெற்று

திருச்செந்தூர்த் தாலுகா உடன்குடிநகர் மகா-ள-ள-ஸ்ரீ

புகழும்பெருமாள் பிள்ளை அவர்கள்

குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ

**முத்துசுவாமியாபிள்ளையவர்களால்**

பார்வையிடப்பெற்று,

நாங்குநேரித் தாலுகா இராதாபுரம் மகா-ள-ள-ஸ்ரீ

**தெ. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்**

பொருளுதவியால்

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1929

4 JAN 193

உ

# சாற்றுக் கவிகள்.

குலசேகரன்பட்டினம் திருவிள்ளுவரகம் திருவாளர்

**ப. இராமநாத பிள்ளை அவர்கள் இயற்றியது.**

வெண்பா.

திருவார் இராசைநகர் செய்யகலி யாணி
மருவார் திருவடிப்பா மாலை—ஒருவாத
அன்பாலே பன்னிருகை யன்பனூர் கட்டுரைத்தார்
இன்பார் கடைமுதலா யிங்கு.

இராதாபுரம் திருவாளர்

**நெ. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் இயற்றியது.**

மூவுலகுந் தொழும்ராசைப் பதியில் மேவு
முக்கண்ணன் றேவிகலி யாணி மீது
பாவகம்வைத் தந்தாதி சொன்னான் பத்தை
பன்னிருகைப் பெருமான்கல் விக்கு ராசன்
ஆவலாய்ப் பாவலர்கள் அன்பு வைத்து
அகமகிழ்ந்து பார்த்துணர்ந்தார் கற்றோர் கேட்டோர்
சிவகா ருணியராய்ப் பாக்கியம் பெற்றுச்
செல்வரா யிருந்துலகிற் றினம்வாழ் வாரே.

இராதாபுரம் திருவாளர்

**பொன்னப்ப பிள்ளை அவர்கள் இயற்றியது.**

ஏர்பெருகுந் தெனிராசைப் பதியில் மேவு
மிறைவிநித்ய கல்யாணி யம்பாள் மீது
சீர்பெருகு மந்தாதி சொன்னான் கல்விச்
சிங்கமாம் பன்னிருகைப் பெருமான் கன்றாய்ப்
பார்புகழும் பாவலர்கள் பார்த்துணர்ந்து
[illegible]பொழியுதென்று பகர்ந்தா ரன்பாய்
[illegible] கற்றோர் கேட்டோர்
அரியதவம் பெற்[illegible]கிழ் மூழ்கு வாரே.

உ

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேவன் மெல்லடி வாழ்க.

# நித்திய கலியாணி அம்பாள்

# அந்தாதி.

## கணபதி தோத்திரம்.

காப்பு.

வெண்பா.

நீர்பொருந்தும் ராசைநகர் நித்தியகல் யாணியின்மேற்
சீர்பொருந்தும் அந்தாதி செப்புதற்குப்—பேர்பொருந்தும்
வல்லபைக ணேசா மகிழ்ந்துன் னடியிணையை
நல்லமல ராற்றொழுவே னன்.

## சரசுபதி தோத்திரம்.

வெண்டா மரைமலர் மேலே கனிவுடன் வீற்றிருக்கும்
வண்டார் குழலி சரசு பதித்தாயென் வாயிருந்து
செண்டார்ந்த கைக்கலி யாணியந் தாதியை செப்பஅருள்
கொண்டார் மலரயன் நாக்கி லிருந்தின்பங் கொண்டவளே.

## குரு தோத்திரம்.

இவ்வுலகில் நீர்வளங்கள் மிகும்ராசை நன்னகர்வாழ்
இறைவி எந்தாய்
செவ்வைவரு மையைநீக்குங் கலியாணி யந்தாதி
சந்தஞ் சொல்ல
அவ்வைதனைக் கயிலாசஞ் சேர்த்தகண பதிக்கிழையாய்
அன்பர்க் கனிபாய்
எவ்வுயிர்க்கு மிடர்நீக்குஞ் சிவகுருவே அருள்செய்து
எனைக்காப் பாயே.

## நூல்.

சீர்கொண்ட மாமது ரைப்பதி வாழுநற் றேவியவள்
கார்கொண்ட கூந்தல் கனிவாய் மலர்முகங் கைக்கமலம்
ஏர்கொண்ட செண்டே னெகிழ் வாகி யிறையுடன்வந்
தார்கொண்ட ராசை யிருந்தா ளுயிர்க்கருள் சுந்தரியே. (1)

சுந்தரி யேநின் றிருவுருக் கண்டு துதிக்குமென்பால்
வந்தமர்ந் துள்ளத் தழுக்கினை நீக்கிநல் வாழ்வருளி
எந்தன் பிறப்பு பிறப்பு மறுத்துன் னிணையடிக்குச்
சொந்த வடிமைய தாக்கிக்கொள் வாய்நற் சுகம்பெறவே. (2)

சுகமே பெருகுஞ் சிவஞானப் பால்முன் சுதனழும்போ
தகமே குளிர வளித்தவ ளேயன்னை யானவளே
செகமே புகழச் சிறியே னிடர்களைத் தீர்த்தருள்செய்
திகமேவுந் றொண்டரைச் சேரவைப் பாய்பணித் தேற்றிடவே. (3)

ஏற்றதி லேறிச் சிறுத்தொண்டர்க் காகமுன் னெம்பெருமான்
தோற்றம தாகி யருள்கொடுத் தான்புகழ் தொல்லுலகில்
சாற்றும லையரை யன்மக ளேநின் சரணடைந்தேன்
கூற்றுவ னென்னைத் தொடராம லேவந்தாட் கொள்ளுவையே. (4)

கொள்வார் சிரமே லனைநின் பொற்பாதங் குவலயத்தோர்
விள்வார் பலபல பாமாலை தன்னை விளக்கிடப்பண்
புள்ளார் நறுமலர் கைக்கொண்டு போற்றுவர் புண்ணியர்கள்
தள்வா ருலகினி லின்பமுந் துன்பமுந் தானறவே. (5)

அறுப்பான் பலதுயர் பந்தத் தளையைமெய் யன்பருக்குத்
திறப்பான்நல் வீட்டைத் தெனிராசை மேவிய செல்வனெனுங்
கறுப்பனை கண்டன் வரகுண அண்ணலின் காதலியைச்
சிறப்பானி யன்னையைக் கும்பிடு வோர்க்கொரு தீங்கிலையே. (6)

தீவினை யில்லையென் றுன்றிருக் கோலமென் சிந்தைதனில்
நீங்காமல் வைத்துன் றிருநாமந் தன்னை நினைந்துருகித்
தூங்காம லானந்த நித்திரை செய்து துதிப்பதற்கு
ஓர்கால மெப்போதம் மாவடி யேனுக் கருளுவையே. (7)



அருளா திருந்தா லடியேனைத் தற்காக் கருளுவதார்
இருளா னதுதா னொருபாதை செல்ல யிடைவழியில்
மருளா ரெனது மனமதை மயக்கியே மாய்த்திடாமல்
பொருளா னவுன்னடி யென்முடி சூட்டியாள் பூரணியே. (8)

பூரணி யேநின் சொரூபத் தைக்கண்டு புகழ்ந்தன்பினால்
சீரணி யுங்கவி மாலைக ளாற்றுதி செய்துநின்றால்
பேரணி யானந்தக் கண்ணீ ரொழுகநற் பேரின்பமாய்
நீரணி யுங்கல் மனமு முருகிடு நிதமுமே. (9)

நித்திய முங்கடுஞ் சொற்களைச் சொல்லிடு நீதிகெட்ட
சத்துரு வானவ ரோடுசேர்க் காமல் தரணிதனில்
பத்தரின் சேர்க்கை பதிந்திடு மாறு பணித்தருளிச்
சித்த மலமறுத் தாட்கொள்ளு மம்மை திருவடியே. (10)

திருவடித் தாமரை யைச்சிரஞ் சூட்டித் தெளிந்தவன்பால்
மருமலர் தூவித் தொழுது பணிந்து மகிழ்ந்திருந்தால்
இருவினை நீங்குங் கலியாணி யம்மை யிருங்கடைக்கண்
தரும்பர வீட்டி லிருந்துமெப் போதுஞ் சலிப்பில்லையே. (11)

சலியா திருக்க வரந்தரு வாயிச் சகமதனிற்
கலியா னதென்னைப் பிடியா தருளிக் கலிபிடித்தாற
பலியா தகற்றும் வரகுணர் பாதம் பணியுமையே
கலியாணி யான விராசையில் மேவுங் கயற்கண்ணியே. (12)

கண்ணாலே பார்த்தெவ் வுயிரையுங் காக்குங் கறைக்கண்டன்சேர்
பெண்ணான மங்கையர் கட்கரசே! ஆசைப் பேய்பிடித்து
எண்ணாத வெண்ணங்க ளெண்ணு மயரினி லென்னைவைத்தாய்
பண்ணாத தீங்குகள் செய்ததைத் தீர்த்தாள் பார்வதியே. (13)

[illegible]ரான திற்பிறந் தேன்விளர்ந் தேன்கெட்ட பாதகனாய்ப்
பேயான தையெடுத் தேன்பல துற்புத்தி பேய்பிடித்து
தோரான புத்திக ளில்லாமற் செய்வதை நீவிலக்கிச்
சீரான வுன்கழற் கீழ்வைத்துக் காத்தருள் செய்குவையே. (14)

செய்தா யறந்தன்னைச் சீர்தெதன் றெண்ணித் தெளிந்தடியேன்
பொய்தா னகற்றுவ தென்றுகொ லோவுன்றன் பொன்னடியில்
மொய்தான் பொருந்து நறுமலர் தூவி முறைப்படியென்
கைதான் றொழப்பண்ணி யுன்றிருக் கோலமுங் காட்டுவையே. (15)

காட்டி யிருப்பினு நின்று ளிணைகள் கருத்திருத்தி
நாட்டநின் னஞ்செழுக் தோவா திருக்க நலமருள்வாய்
வீட்டை விழைந்தவர் வேண்டிய செய்யும் வினையறியேன்
ஈட்டிய பாவங்க ளையறுத் தெங்கு மிருப்பவளே. (16)

இருப்பாள் பரம கலியாணித் தாயென் னிதயமதில்
திருப்பா லமுதத்தை வற்றும லூற்றுவள் தேனமரும்
மருப்பா ரிசாத முதலான புட்ப வகைபலவும்
விருப்பா கக்கூந்தலி லேயணி வாளெந்த வேளையுமே. (17)

வேளையி தென்னைநீ காப்பாற்றி யாட்கொள வேணுமென்றுன்
றாளை மலர்கொண் டிறைஞ்சித் துதித்தேன் தரணிதன்னில்
மாளும் படிக்குவை யாதேகண் பார்த்துன் மனமகிழ்ந்து
நாளுநற் புண்ணிய நாளாக்கித் தந்தருள் நாயகியே. (18)

நாயகி யேயென்னை நாளுங் கவலைய ளாக்கிவைக்கத்
தீயே னுறுபிழை யேதோ தெரியேன் தெளிவுதந்து
தாயே மலமுன் றதையு மறுத்துத் தயவுசெய்து
நீயே கடைக்கண் ணினாற்பார்த்துத் தானன் னெறியுமையே. (19)

உமையா ளெனுமங்கை யுத்தமி யிந்த வுலகுக்கன்னை
அமையா திருக்கு முயலகன் றன்னை யடக்கினவன்
இமையோர்கள் செய்த வினைகளை தீர்த்தருள் ஈசனிடம்
அமைந்தாண் டிருந்தனள் துன்பத்தை நீக்கியென் னுளிலுமே. (20)

நாளும் பலவினைத் துன்பங்கள் நீக்கற நாயகியே
ஆளும் படிக்குத் தயவுசெய் வாய்கல் லருள்புரிவாய்
மீளவுஞ் சென்ம மெடுக்காம லேயுந்தன் மெய்யடியின்
கீழுறு மானந்தங் கொள்ளவைப் பாயுறை கேட்டுநீயே. (21)



மகடமனக் கென்ற னுயிரினைக் கோடியே நீழ்விழவே
வாட்டுமுன் சென்ம வினைபறத் தாள மனமில்லைப
நாட்டு னமைத்துன் செவிக்கறி வித்திடும் பண்பெனக்குக்
காட்டி யருள்செய் கலியாணித் தாயுன் கருணைவத்தே. (22)

கருணைவைப் பாயென் புலன்களை வெல்லக் கருத்தினுள்ளே
இருளறுப் பாய்சிவ மெய்ஞ்ஞான தீபத்தை யேற்றியான்
திருவடிக் கேயுயர் சைவாக மங்கண்டு சிந்தைகனிக்
தருகவைப் பாயன்னை யேகலி யாணசவுந்தரியே. (23)

சவுந்தரி யேயெண்ணி லாகமச் சொற்படி சங்கரனைப்
பவந்தீர வர்ச்சனை செய்துகை கூப்பிப் பணிந்துவளர்
தவம்புரிந் தானந்தச் சோதியைச் சேர்ந்த தவக்கொழுந்தே
அவந்தரு மென்ற னினைவதை நீக்கி யறிவருளே. (24)

அறிவான தீபத்தை யுள்ளத்தி லேற்றிநின் னன்பரெல்லாஞ்
செறிவாய்க் கடுந்துயர் செய்யினு மீசன் செயலிதென்று
திறமாய் மகிழ்ந்தவ ரோடென்னை யுன்றன் றிருவடிக்கே
உறவா யிருக்கவே வைப்பாய் கலியாணி யுத்தமியே. (25)

உத்தமி யேவையத் தெண்ணில் பெரியோர்க ளோர்மனதாய்
முத்தியைப் பெற்றன ருன்னுமம் போற்றிடு மூதறிஞர்
பத்தியு நல்ல மனதையும் பார்த்திந்தப் பாவிநெஞ்சில்
வைத்துத் துதித்துக் கதிபெறச் செய்தருள் மாதுமையே; (26)

மாதா பிதாகுரு தெய்வமுஞ் சுற்றமு மக்களுமாய்
வாதாடித் தீமையு நன்மையுஞ் செய்யும் வலியுளதாய்த்
தாதாவென் றூடுஞ் சபேசனு மாகித் தயவுடனே
பேதாபே தங்களைக் காத்தருள் செய்யும் பெருந்தவமே. (27)

தயவோ டிருந்தெவ் வுயிர்க்கும் பசிக்குந் தருணமதில்
வயிறார வன்னம் படைக்கும் பொருளு மதியுடனே
துயரான வாபத்து வேளைக் குதவுநற் சொற்சத்தியும்
நயமோ டியர்கதி சேரவுஞ் செய்தருள் நாயகியே. (28

2

நாயகி யேபிற விக்கடல் தாண்டுமெய்ஞ் ஞானியரை
நேசமாய்க் கண்டு வணங்கித் துதிக்கு நெறிதருவாய்
மாயன் சகோதரி யாயு மலையன்கு மாரியுமாய்த்
தாயக மாகி யுலகத்தை யாண்டருள் சங்கரியே. (29)

சங்கரி யேயில் லறந்தோ டிருந்து சகந்தனிலே
மங்காத செல்வங்கள் பெற்றறஞ் செய்ய வகையருள்வாய்
பொங்குங் கருணை நெறிதரு ஞானமெய் பூரணியே
எங்கு நலந்தரு வாய்புக ழோங்கிய வென்னனையே. (30)

என்னனை யேயென் றுயர்களைக் கேட்டு மிரங்கலையே
சொன்னதெல் லாமுன் செவிகேட் டிடாதுபோற் றாரநின்றாய்
முன்னென் வினைவந்து வாட்டுதம் மாவென் முகமதைப்பார்த்
தின்னலை நீக்கிச் சுகமான வீட்டி லிருத்துவையே. (31)

இருத்திவைத் தாளுவை யென்கருத் தெல்லா மியம்பினனுன்
கருத்தறி யாதோ தயவிலை யோமனங் கல்லிரும்போ
வருத்தமுண் டோகரு ணைக்கெதி ரோவென்றன் வல்வினைகள்
உருத்துநின் றின்றி மறைந்துள தோவுன்றன் பார்வையிலே. (32)

பாரா திருக்கயான் செய்குற்றம் யாதுமா பாதகனுய்ச்
சீரார் மதுரைத் தலஞ்சேர்ந் தவன்பவந் தீர்த்தருளுங்
காரருங் கண்ட னிடப்பாகம் பெற்ற கயற்கணியே
நேராகப் பார்த்தென் வினைதீர்த் தருளிந்த நேரமதே. (33)

நேரந் தவறியே போகுதம் மாவுன்மேல் நித்தியநான்
சீர்த்து பாடித் துதிமாலை சாற்றியென் செய்திசொன்னேன்
பாரதி வின்னமுந் தாமத மேன்வந்து பார்த்தெனையாள்
காது மேனித் திருமால் சகோதரிக் கன்னிகையே. (34)

கன்னி நிலமகள் தன்முகம் பார்த்துக் கருணையினால்
என்னுனி றுவி லிருந்துன் புகழை யியம்பிடச்சொல்
முன்னான் சொல்லும் பொருள்கேட் டகமகிழ் மும்மலைத்தாய்
உன்னைத் துதித்துநிற் பேன்கலி யாணியென் னுள்ளத்திலே. (35,



உள்ளுணர்ந் தேகதி சேரும் பொருளை யுவந்தளித்து
வெள்ளரி தானந்த வேலையி லாட்டி வியப்புறவே
தெள்ள நெறிவந் தனுனமற் காத்தென் கருத்திலென்றும்
பள்ளமில் லாம லறிவைவி றப்பியாள் பார்ப்பதியே. (36)

பாரும் விசும்பும் புகழ்சந்த ரன்பின்னை பற்றிவந்து
சேரும் பெருமாள் கயிலையிற் சேர்ந்த செயலறிந்து
சாரு முடலறுத் தேதள்ளிச் சம்போ சரணமருள்
தாரு மெனவே பதஞ்சேர்ந் தனர்தனி வீரர்களே. (37)

வீரரை யீன்றிடுந் தாய்மணி யொன்பதும் வீசுமொளி
போது கொண்ட சிலம்பணி யுன்றாள் பிரியமுடன்
நோது கொண்டு துதித்தே மகிழ்கதி நித்தியமும்
சேரவைத் தாளுமம் மாவுல கீன்ற சிவமயிலே. (38)

சிவமேயென் றேத்திப் புலிநகக் கால்கை திருக்கண்களாய்
தவமே யுருக்கொள் வியாக்கிர பாதருஞ் சர்ப்பமென்ற
அவமேது மில்லாப்ப தஞ்ச லியுமெடுத் தம்மலரை
பவமே துடைக்கு மரன்கால்மேற் றாவி பணிந்தனரே. (39)

பணியும் வியாக்கிர பாதர் தவத்துதி பாலனற்பே
ரணியும் உபமன் னியுமுனி வர்பசி யால்வருந்தும்
பிணியுந் தவிர்ந்து மகிழ்ச்சி யடைந்து பிறவித்துயர்
தணியும் படிக்கடற் பாலீன்றோன் சேவையைத் தாவுமையே. (40)

உமையே உபமன் னியனு ருபதேச ஒண்பொருளின்
அமைவா லடிதலைப் பெற்றுயர் மாலுநம் மண்ணலடி
குமையாமு லேமனம் வைத்துத் துதித்துக் குணமுடனே
இமையாடு நேரமு நீங்காது பூசித் திருந்தனனே. (41)

இருந்தா னனைத்தையு மீன்றவ ளன்ப ரிதையமதில்
மருந்தாய்ப் பிறவிப் பெரும்பிணி தீர்த்து மழுக்கையர்க்கு
விருந்தா யுலகத் துயிர்வாழ்வு முத்தி விருப்பமுடன்
திருந்தா யவனைத் தொழுவோ ரிருப்பதுந் தண்பதியே. (42)

நம்பிக்கை வைத்துநா ராயணன் வேண்டி நயமுடனே
பம்புதண் டாமரைப் பூக்கொண்டு போற்றிப் பணிந்துநின்று
சம்பு சிவசிவ சங்கரா வென்று தவசிருந்தான்
எம்பெரு மான்மகிழ் கொண்டுயர் சக்கர மீய்ந்தனனே. (57)

தனமண்பெண் ணாசை மயக்கத்துட் பட்டுத் தயங்கிநின்று
மனந்தடு மாறிச் சமயம் பலதெய்வ மந்திரங்கள்
கனமென நம்பிப் பாதார மிச்சை கருத்தில்வைத்து
ஜனன மெடுக்கவை யாதருள் செய்யுந் தருணமிதே. (58)

தருண மிதுநம னூர்வரு முன்னே தயவுசெய்து
பொருளழ காய்த்தரு முன்றா ளிணையிற் புகழ்பெருக்கி
மருமலர் தூவிப் பணியு மனத்தை மகிழ்ந்தளிப்பாய்
இருவினை நீங்கும் பிறவிப் பிணியுறா தென்றனக்கே. (59)

எந்தன் மனது பிறர்பொரு ளிச்சித் தெனதியானென்
றந்தாங் கத்தி லலைந்து கெடாம லமைவு கொண்டே
உன்றிரு நாமத்தைச் சொல்லுநல் லன்ப ருடனிருந்து
கந்த மலர்கொண்டுன் பாதம் பணியுங் கருத்தருளே. (60)

கருவாய்ப் பிறக்கினு மண்மே லிறக்கினுங் கண்கலங்கி
விருநீ நாகத்தில் வீழினுஞ் சொர்க்கம் விரும்பியங்கே
ஒருவா யிருந்துநல் லின்பத்தில் மூழ்கினு முண்மையுடன்
தருவா யுனதடிக் கன்புறும் வாழ்வு தவக்கொழுந்தே. (61)

தவப்பய னல்குந் தலைவனுன் பாகத் தமர்ந்தசிவன்
அவப்பயப் பிச்சை யெடுத்துண்ணப் போன வதிசயமென்
எவர்க்கும் விளங்க வியம்பிடு வாய்நீயென் னான்கறமும்
கவனித்துச் செய்துயிர் யாவையுங் காத்திடுங் கன்னிகையே; (62)

கன்னி யறஞ்செயு முன்னையும் போற்றியிக் காசினியில்
உன்னிப் புடன்றமிழ்ப் பாமாலை கள்கொண் டொருவர்தன்பால்
பின்னும் பொய்மெய்யு மியம்பவைத் தாய்மனப் பேய்பிடித்து
இன்னற் படவைத்தல் தானோவம் மாவுன் னருளினிதே. (63)



இனிமையாய்ச் செங்கதிர் நெற்றித் திலக மிணக்கமுடன்
னிமா துளம்போது மாணிக்கம் போலுநற் பாவின்மகள்
நனிவுட னேதுதி மின்கொடி மென்கடிக் குங்குமம்போல்
னியுஞ்சொல் வேதங் கலியாணித் தாயுன்பர் கண்மணியே. (64)

கண்டு தொழுந்தெய்வ மாய்ப்பெற்ற தாயாய்க் கருப்புவில்லுங்
கொண்ட பூம்பாணங்கள் பாசாங் குசமுங் குலவுகையிற்
செண்டுந் தரித்தநல் வேதப் பதியாய்ச் சிறந்திருந்தே
அண்டங்க ளீன்றகல் யாணி புகழ்சொல் லரிதரிதே. (65)

அரியைச் செயித்த சலந்தர னைப்பிளந் தன்றாணு
புரியு மாசுதெய் வேந்திர னுக்கன் புடனளித்து
கரியை யரவைப் பசுவைக்கொன் றானுன் கணவன்றிறம்
பெரிதைச் சொல்ல யெவராலே கூடிடும் பெண்ணரசே. (66)

பெண்ணாகிக் கண்ணனும் நிர்வாண மாகிப் பிறப்பிலியும்
பண்ணோடு பாடிக்கொண் டேதாரு காவனப் பண்ணவர்கள்
எண்ணார் மனைவிகள் கற்பத்தென் னாயிர மின்னவர்தங்
கண்ணோடப் போயவர் கற்புரைத் தாருன் கணவனன்றே. (67)

கணக்கத னிற்கூலி யாள்ப்பிட்டு வாணிச்சிக் காகவந்தேன்
இணக்க முடனே வெழுதிவை நீயென் றிடக்குச்செய்து
வணக்கமில் லாம லரிமர்த் தனன்கை வலிப்பிரம்பால்
குணக்கேட னாயடி பட்டானுன் காதன் குணமிதுவோ. (68)

குணமுன் றலைவன் செய்போகத் தையன்று குலைத்திடுதற்
கிணங்கவொண் ணாதென விண்ணிலே யுள்ளவ ரெல்லவரும்
ணிந்துபோ யென்றேவல் செய்ய வுருவிலி தக்சித்துப்பின்
மலர் கொண்டெய்தானைப் பொடிசெய்தவன் வாழ்க்கையிதோ.

வாழ்வு முடனு நிலையில்லை யென்று மனந்தெளிந்தும்
தாழ்வி லமிழ்த்தும் பொய்மாயை யி
பாழ்பட் டழிந்துன் றிருவடித் தா பற்றில்லாக்
கீழ்மை யகற்றி யருள்வாய்கல் யாணி கிருபைவைத்தே. (70)

183552

கிருபா சனத்திலிருக்குங்கல் யாணியென் சேடதிந்து
அருளாம னீயிருந் தாற்குற்றந் தீர்ப்பவ ராரெனக்கு
மருளா திருக்கும் வகையருள் வாய்நல் மதிதருவாய்
அருளே யுனது மலர்த்தாளே யென்சிர மாத்தருளே. (71

அருளார் குகனையும் ஐந்து கரனையு மன்புடனே
திருவார்கல் யாணியென் தாயேபொன் போலொளிர் தெள்மணியாய்
மருவாருங் கற்பகம் வானோர் புகழ மகிழ்ந்துபெற்ற
பெருமாட்டி யேநல் லுபதேசஞ் செய்தெனைப் பேணுவையே. (72)

பேணல்செய் யேனின் சரணம் புயத்தைப் பிரீதியுடன்
ஆணவ மென்னை மறைத்தென் னறிவை யழிக்குதம்மா
காண முதலிய வெல்லா கலனையு ஞன்றுறந்து
...ணுக் குழைத்த கொடியே யெனையாட்கொள் ளுத்தமியே. (73)

உத்தம னென்றெனைச் சொல்லுந் தாமுமென் னுள்ளமதில்
பத்த முடனீ யிருந்துப தேசிக்கும் பாக்கியமும்
அத்த னடிகளைப் பூக்கொண்டு பூசிக்கும் அன்புந்தந்து
சித்த மிரங்கியுன் கண்ணினாற் பார்த்தருள் செய்குவையே. (74)

செய்யாத சோதனை சந்தேகங் கொண்டு சிவபெருமான்
மெய்யான வன்றன் மகிமையெண் ணாமலே வேடிக்கையாய்க்
கையா லிருகண்ணை மூடிப்பின் னல்லீ கவலையுற்றாய்
ஏய்யாமல் மூடித லாமோகல் யாணி யியம்புவையே. (75)

இயமன் வானுன்னைச் சேவித் தனுமுத லெப்பொழுதும்
பயமேது மில்லை அமையாத காட்சிநற் பத்தருக்கு
நயமோடு நீகொடுப் பாயென்று வேத நவிலுதல்தான்
கயமென் றனைநம்பி னேன்கலி யாணி சுகமருளே. (76)

சகளுடன் வித்தை தருவெந்த நாளிலுஞ் சோர்தலில்லா
...மகிழ் வாகிப் பொலிதலு மாகு மகத்தைகெடும்
இமைதில் தெய்வ வடிவும் பொருள்நல மெல்லார்க்கரும்
பவ விடப்பா லுறையுங் கல்யாணியுன் பார்வையிலே. (77)



பார்க்க வகத்திய ராதி முனிவைம் பதுபேர்கள்
சேர்க்கையாய்ப் போக வரமுனி கண்டுதன் செய்தவத்தின்
ஆக்கத்தி னுபசஞ் சாஞ்செய் பாம லவமதித்தான்
...க்கம தென்ன தவப்பய னேசொல்லென் னுத்தமியே. (78)

...த்தம ஞான வரமுனி யன்று உரிமையுடன்
மெத்தத் தவஞ்செய் திருக்க வவனைநல் மெய்த்தவத்தோர்
ஒத்த மனங்கொண் டெருமைக் கிடாமுக மொன்றவென
சத்தம திட்டுச் சபித்தா ரிதுவென்ன தாயுமையே. (79)

தாயருள் பெற்ற வரமுனி தானொரு சாபம்பெற்று
மாயஞ் செயுமெரு மைக்கிடா வின்முக மாகவந்து
சேயது வாய்மகி டாசா னாயிச் செகமதிலே
நேயஞ் செயுமன் னதரிஷி யையுண்ட நேர்மையென்னே. (80)

என்னம்மை யேமன் னதரிஷி லிங்கத்தை யெப்பொழுதும்
கன்ன லெனவைத்துக் கொண்டே வருகையிற் காதலுடன்
முன்கண் டெடுத்து மகிடா சான்றன் முழுங்கினது
என்ன வனியாய மம்மாகல் யாணி யிதுவுரையே. (81)

உரையான துன்சொல்லைக் கேட்டன்று துர்க்கையு மோர்மனதாய்
மறையின் சொல்லென்று மகிடா சுரனை மடித்தவன்றன்
நிறைவா யிருக்கு மிடறதில் லிங்கத்தின் நேர்மைகண்டு
முறையா யெடுத்துன் கைதந்த தென்னசொல் முழுவதுமே. (82)

முழுமுத லுன்கையைப் பற்றி னதிமகிழ் மூழ்கினதும்
தழுவத லுக்கு நினைத்ததை யுமித்தத் தாரணியில்
வழுவுத லில்லா துனதன்பர் கேட்டினை வாழ்த்துவதாம்
பழுதறத் தோன்று தம்மாகலி யாணியென் பாக்கியமே. (83)

பாக்கிய சாலியம் மாகலி யாணியுன் பத்திநிலை
யோக்கியங் கண்டு மகிழ்வா யானல்ல யுத்திகொண்டு
சாக்கிர தையுட னேமனஞ் செய்து சகத்துயிரை
நோக்குதல் செய்யும் அருள்புரிந் தான்செய்தி நூங்குமன்றே. ()

தூங்குகொண் டன்னாள் அயன்றனைக் கேயூகம் நட்பமகம்
ஓங்குத லால்திரு மாலுடன் சென்று ஒருமனதாய்
பாங்கியில் லாமலே போர்செய் தௌர்வாய்ப்பத வியற்று
நாங்குத லாயிருக் குஞ்செய லென்னரு ளுயகியே. (85)

நாயகி யுன்ற னரனருள் சண்முக நாதனன்று
வாயது பேசா திருக்குங் குழந்தையை வாய்திறந்து
நேயமு டன்கவி வெண்பாவைப் பாடு நெறியளித்தான்
தாயது போலென்னை யாட்கொள வேண்டுந் தயாநிதியே. (86)

தயவுடன் றாயே யுனக்கா னன்று தனித்திருந்து
நயமுட னேயுப தேசிக்கும் போதது நல்லதென்று
கயமுகன் றம்பி யறிந்துதன் தந்தைக் கனமுடனே
சுயம்புவென் றேயறி யாதுப தேசித்த சூட்சமென்னே. (87)

என்னை யெதிர்க்க வுலகி லொருவரு மில்லையென்று
தன்னைப் புகழ்ந்த சலந்தர னாவிகொள் சங்கரன்போல்
உன்னைத் துதியா மகுடாசு ரன்ற னுயிரழித்தாய்
அன்னை யுனது மகிமை யறிந்தவ ரார்புகலே. (88)

ஆரணி தேவன் புதல்வன் கயமுகன் அன்றொருநாள்
தூரலைச் செய்யுங் கயமுக சூரனைத் துட்டனென்ற
போரவ னைக்குத்தி வாகன மாக்கிப் பெருமைகொண்டான்
சீரதைச் சொல்ல யெவராலே யாகுநீ செப்புவையே. (89)

செப்புங் கிரவுஞ்ச னோர்மலை யாகிச் செருக்கடைந்தே
இப்புவி தன்னிற் கிடந்தா னவன்மே லிருக்குமந்த
தப்புசெய் தாரக னோடே கிரவுஞ்சன் றன்னையுமுன்
ஒப்புட னேகந்தன் கொன்றான் றிறஞ்சொல் லுமையவளே. (90)

உமையே யுனது திருவடிக் கன்புகல் லுண்மையுடன்
அமைவோ டிருக்கும் வரமதுந் தந்தெனக் காதரவாய்
இமையோர் வணங்குஞ் சிவனடி யென்மன மெப்பொழுதும்
சுமையாக வைத்துத் துதிக்கும் வரமுந்தா தொண்டனுக்கே. (91)



[illegible]ண்டுசெய் வோருன் னடிமலர் கொண்டு துதித்துநிற்பார்
[illegible]டுநற் பத்தர்கள் பாமாலை சாற்றிப் பணிவுசெய்வார்
மண்டுத லாகி மலர்தூவி விண்ணோர் மகிழ்ந்துநிற்பார்
அண்டத் துயிரை யளித்தவ னீயென்னை யாதரியே. (92)

ஆதியின் பாக மமர்ந்தகலி யாணி யருட்பதத்தை
நீதியு டன்மலர் கைக்கொண்டு போற்றி நிதமகிழ்ந்து
ஓதியு டன்பல பாமாலை சாற்றி யுகழ்ந்துநின்றால்
சோதியு டன்வரு வாள்மன மேநற் றுணைநமக்கே. (93)

நமக்குப் பயமில்லை கூற்றுவ னாற்சுக நாளும்வரும்
குமர குருபர சுவாமிக் கருள்செய் குமரனன்னை
இமயமில் லோன்ற னிடப்பாகம் பெற்ற இமயவல்லி
சுமங்கலை பாதந் துதித்துப் பணியுங்கள் தொண்டர்களே. (94)

தொண்டர்கள் கூடித் துதிசெய் வதும்நல்ல தூயவரும்
விண்டலத் தோருஞ் சிவசிவ வென்று விளம்புவதும்
முண்டகன் மால்மத் தளந்தாள நின்று முழக்குவதும்
கண்ட னுமைகளிக் கநடஞ் செய்வதுங் காணுநெஞ்சே. (95)

காணும் படியுக்ர சாமுண்டி யோடு கபடஞ்செய்து
காணும் படியொற்றைக் கால்தூக்கி நின்று நடனமிடுந்
தாணுவைச் சேர்ந்த கலியாணி பாதந் தலையிற்கொண்டு
பேணுதல் வைத்துத் துதிப்பே னெனக்குப் பிறப்பிலையே. (96)

பிறப்பிலி யைக்கம்பை மானதி தன்னிற் பெருமையுடன்
மறப்பில் கரமலர் தன்னாற் றழுவுமா தேவிகழல்
சிறந்த னுடன்மலர் கைக்கொண்டு பூசனை செய்திருந்தால்
பெறத்தகுங் காட்சி பெறலா மனமே பிழையிலையே. (97)

இல்லை நிலையிந்தப் பூமியின் வாழ்க்கை யிதைநினைந்து
தொல்லைப் பிறப்பினுக்காசைப்பட்டேன்முன்செய் தொல்வினைகள்
எல்லையில் லாத்துயர் செய்திங்கு வந்தென்னை யெப்பொழுதும்
கொல்ல நினைக்குதம் மாகலி யாணியாட் கொள்ளுவையே. (98)

கொள்ள லடிமையா யன்பர்க ளொக்கண்டுன் கொள்கைய தெ
மெள்ள வெறிதந்தென் றன்பத்தை நீக்கிநின் மேன்மையுடன்
கள்ளமில் லுன்னடிக் கன்புந்தந் தென்னை நீ காத்தருள்வாய்
அள்ளலுட் டள்ளிவி டாதே கலியாணி யம்மைநீயே. (99)

அம்மாமுன் செய்த வினைமுதல் பாவு மறுத்தருள்தந்
திம்மா னிலத்தி லுனைமற வாத வியல்புதந்தாள்
பெம்மா னிடத்திருந் தேயறஞ் செய்துயிர் பேணுபிள்ளைக்
கைமா வளித்தவ ளேயன்பர் பாட்டுட் கனிவுஞ்சிநே. (100)

நித்திய கலியாணி அம்பாள் அந்தாதி
முற்றிற்று.

உ

கணபதி துணை.

இராதாபுரம்

# நித்திய கலியாணி அம்பாள் பேரில்

# கீர்த்தனைகள்.

இராகம்-கலியாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

அம்மாள் பணிவிடை சும்மா செய்தலை
அன்றி அருள்புரிவாள் மனமே நீ
நன்றாய்க் கதிபெறுவாய் (அ)

அநுபல்லவி.

இம்மானி லத்தினில் பெம்மா னவள்பாகம்
இருந்தருள் புரிகின்றான் சிறந்தவள் கலியாணி (அ)

சரணங்கள்.

புட்ப மெடுத்து அவள் பொன்னடியைப் பூசித்து
போற்றி வினைதீரென்று புகழ்ந்துபாடி ஞாலென்றும்
ஒப்புமை இல்லாத ஒருவனையுந் தொழலாம்
உனக்கும் பயமொன்றில்லை உரிமையுடன் மகிழ்ந்து (அ)

கல்வியுட னல்மனம் கனந்தனமுந் தருவாள்
கருணையு டனன்றுயர் களையெல்லாம் நீக்குவாள்
நல்விவேக விர்த்தியும் நாடோறு மருளுவாள்
நயனத் தடுத்துசிவ னடியார்க்குவுள் வைப்பாள் (அ)

அண்டங் காத்தகண்ட னமரர்களையுங் காத்தீன்
அன்பர் களையுங்காக்கு மானருள் பெருமுமை
கொண்டல்கள்சஞ்சரிக்கும் குளிர்மலர்ப்பொழில்சூழும்
கோதில்லா ராசைநகர் கோயில்வாழ் கலியாணி (அ)

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

கல்யாணி காத்தருள்செய்—கடைக்கண்ணால் பார்த்தென்னை
கல்யாணி காத்தருள்செய் (க)

அநுபல்லவி.

கல்யாது வைப்பாயன்னே நாயிற்கடையான் சொன்னேன்
செல்வமே ஞானமே தேனே சிவமயமே (க)

சரணங்கள்.

கன்னலே கயிலைவாழ் கர்த்தன்சேரு மயிலே
சொன்னமேயென் கைதூக்கு துன்பப்பிறவி நீக்கு
பொன்னணி பூவணி பூரணி புராதனி (க)

முன்வினைப் பயனது முன்வந்து இழுக்குதே
என்னை விடாதேநீயே ஏழைக் கிரங்குவாயே
அன்னையே கன்னியே ஆதரித் தாளுவையே (க)

தென்றல்வந் துலவிய தெனிராசை மேவிய
குன்றே குணம்பொருந்துங் கொண்டலேநீ யிருந்தும்
என்றன்மேல் இன்றும்நீ இரங்காத தேனாயம் (க)

---

நாம வாழி.

இராகம்-பூபாளம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கருணையங் கனியே கலியாணி யுமையே
கணபதி குகனைப் பெற்றவளே
திருக்கயி லையில்வாழ் சிவனைச்சேர்ந் தவளே
செகத்து யிர்களை ரக்ஷிப்பவளே
இருக்கும்பூம் பொழில்சூழ் பாசைநன்ன கர்வாழ்ந்
திருந்தர சாக்ஷி செய்பவளே
செறுக்குமென் றுயர்தீர்த் திரக்கம்வைத் துடனன்
செறிகள்தந் தாட்கொள்ள விரும்பே.

---



இராகம்-சுருட்டி-தாளம்-சாப்பு.

பல்லவி.

மங்களம் மங்களம் நித்திய ஜெய
மங்களம் மங்களம். (ம)

சரணங்கள்.

எங்கு மேகமயமாய் இருக்குங் கணபதிக்கும்
எவருந் துதிக்கநின்ற விசனுக்கு முமைக்கும்
மங்காத கடம்பந்தார் மார்பன் பொதிகைமலை
மாதவ முனிக்கருள் வள்ளியூர் வாசனுக்கு(மங்)

தேசத் தவருக்கருள் சிறந்தவள்ளி தேவிக்கும்
தெய்வயானை யம்மைக்குந் தெளிந்தசர்க் குருவுக்கும்
நேசம் விடாமற்சைவ நெறியைப் பரவச்செய்த
நிலைத்த சமையவாசா ணிகழ்த்தும் வேதப்பொருட்கும்(மங்)

பன்னிருகைப் பெருமாள் பணியுங் கந்தன்பாடலை
படிப்போர்க்குங்கனிவுடன் பஜனைசெய்திருப்போர்க்கும்
தன்னிகரில் லாதான் சங்கர னடியார்க்கும்
சர்வத்ர தொண்டர்க்குஞ் சகலலோகத் துள்ளோர்க்கும்(மங்)

சம்பூரணம்.

---

சரணம்.

[redacted]னம் நாலுக்கும் அரிபிரமர்க்கு மெட்டா
[redacted]னனே மெஞ்ஞான மூர்த்திமெமூல காரணனே
[redacted]பாணி தன்னேசனே கஜமுக ளெடுசெந்திற்
கந்தனைத் தந்தோனே கருணையே திருமேனி
யாயுடையவனே கள்ளமனதின்றி உள்ளத்திலேயிருத்தும்
தெருளுடையார்க்குரிய பொருளதாயிருந்து
திருராசை நகர்வாழும் வரகுண பாண்டீசா (எப்)

2-வது சரணம்

சந்திர ஜடாதரா சங்கரா கெங்காதரா
இந்தனஞ் சுமந்தேம நாதனை யோட்டுவித்து
அன்பரைக் காத்தவா ஆனந்தத் தாண்டவா
இம்பரும் உம்பரும் ஏத்தும் பரமசிவா
இறைவனே உமதிரு பதமலர் வணங்குவோர்
ஏழியரைக் காத்தருள் செய்வதே தொழிலாகி
இறைபவனே சரு வேச கைலாச
நிதம்பணி யாறுமுக தாசற் கருளுமீசா (எப்)

## நித்திய கலியாணி அம்பாள் துதி.

இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இவளே டைக்கியமான ஸ்ரீநித்ய கலியாணிதன்
செய்யதிரு மலரடியைச் சிந்தை செய்குவாம் (செ)

அநுபல்லவி.

பவமான பிறவிக்கட லெண்பத்து நாலிலட்ச
யோனி பேதத்தொகை யான வுயிரையெல்லாம்
சூக்கும மாயிருந் தாக்கமாய்க் காத்திடும் (செ)

சரணம்.

மாயன்பிர மாதியர்க்கும் மற்றுமுள ரிஷிகளுக்கும்
தாயகமா யிருந்தருளுந் தயாநிதியை
சேயவளைத் தருதாயைச் செல்விபர மேஸ்வரியை
நேயமுடன் துதிசெய்தால் நினைத்த காரிய
மனைத்துஞ் சித்தியாம் (செ)

சிந்தைதனிற் கவலையின்றிச் செல்விகோவில் வலம்வந்து
வந்தனைசெய் தன்புடனே வாழ்த்திப் பாடியே
கந்தமுள்ள திருமஞ்சட் காப்பதையுமணிந்திட்டுக்கொண்டு
எந்தை வரகுணர்தேவி யென்றே போற்றுந்
தாசர்க்கு நன்றேகை கூடிவரும் (செ)

## சிவபஜனைக் கீர்த்தனைகள்.

### இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

கடைக்கண்ணாற் பார்த்தருள்வாய்
கல்யாணி யம்பா [illegible]

0-12M PR

அனுபல்லவி.

[illegible]டக்கல மாகவந்தேன் அடிமை துயர்நீக்க (க)

சரணம்.

நாடோறு முன்றிருக் கோவில் வலம்வந்து
நாடியுன் பாதத்தைப் பாடி பக்திசெய்ய (க)

மூவர்க்கு மன்னையே முக்கண்மூர்த்தி தேவியே
யாவர்க்கும் இகபர வாழ்வருள் செல்வியே (க)

பிள்ளைசெய் குற்றத்தைப் பிதாமாதா பொறுப்பார்கள்
தள்ளியென் குற்றத்தைத் தாயேநீ பொறுப்பாயே (க)

கூறுமடி யார்கள் குறைநீக்கு மகமாயி
ஆறுமுக தாசற் கருளும்பர மேஸ்வரி (க)

பல்லவி.

வள்ளி நாயகா ஈசா
புள்ளிமயிலேறும் புண்ணியா (வ)

அனுபல்லவி.

ஒள்ளிய வயிற்கையா உற்றவர்க் கருள்மெய்யா
கள்ளிருள் நம்பி புதல்வியை விரும்பிக்
கொள்வினை புரிந்தவா ஈசா (வ)

சரணம்.

தேவர்தமைக் காப்பதற்காச் சூர பதுமனைச்
சிங்கமுகன் தாருகனை வெற்றி கொண்டவா
நாவலரும் பாவலரும் காவலருங் கைகூப்பித்தொழும்
நம்பனே யுன்பாத பங்கயச் சேவை
இங்கெனக்குத் துணையே ஈசா (வ)

திருமயிலைச் சிவநேசர் செல்விபூம் பாவையென்பை
உருவாக்கி வுயிர்தந்த உயர்ஞான சம்பந்தாய்
வருமுருக[illegible] வண்டமிழ்க்கும்பசர்கிரற்கருள்செய்
வள்[illegible] வம்சாட்சகனே (ஈசா)

சிவபஜனைக் கீர்த்தனைகள் முற்றிற்று.

183552